ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௬. சுக்கில ஞூ புரட்டாசிமீ பகுதி ௯.
Vol 6. *September & October 1929.* No. 9.

ஸ்வாதந்தர்யம்.

தெளிவிசும்பாகிய திருநாட்டில் கழிபேருவகையெய்தி சுகமுறுதற்கு யோக்யமாயுள்ள ஆத்மாக்களுக்குக் கொடியவிரோதியாயிருப்பது இந்த ஸ்வாதந்தர்யம் என்ற குணமாகும். இதை அஹங்கார குணமென்றும் வழங்குவர். இந்த அஹங்காரத்தினடியாகத்தான் மமகாரம் என்ற துர்க்குணந்தோன்றும். இந்த இரண்டு குணங்களே ஆத்மா நற்கதியடைந்துய்தற்கு மிகப்பெருந் தடையாயிருப்பன. இதைக் குறித்துத் திருவள்ளுவரும் "யானெனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க், குயர்ந்த வுலகம் புகும்" என்றுரைத்ததனாலு மறியலாம். இங்கு யானெனதென்னும் செருக்கற்றவன் * வீடுபேற்றை யடைவானெனவே அங்ஙனஞ் செருக்கறாதான் உயர்ந்த உலகத்தையடையானென்பதும், வீடுபேற்றுக்குத் தடையாயிருப்பன் இந்த அஹங்கார மமகாரங்களேயென்பதும் பெற்றாம். இதனால் இவையிரண்டும் † "அநாத்மந்யாத்ம புத்திர்யா அஸ்வே ஸ்வமிதி யா மதி:, அவித்யா தரு ஸம்பூதி பீஜமேதத் த்விதா ஸ்திதம்" "அநாத்மந்யாத்ம புத்திர்யா அஸ்வேஸ்வமிதியாமதி, அவித்யாதரு

* வீடுபேறு—மோக்ஷம்.

† இதன் பொருளாவது.— தேகத்தில் ஆத்ம புத்தியும் சொத்தல்லாததைச் சொத்தாக மதிக்கிற புத்தியுமாகிய அஹங்கார மமகாரங்களிரண்டும் பிறவியாகிய மரம் முளைப்பதற்கு இரண்டு விதைகளாயிருக்கு மென்பதாம்

ஸம்பூதி பீஜமேதத்த்விதா ஸ்திதம்" என்றபடி பிறவிக்கு வித்தாயிருககுமென்பதும தெளிவாம். இது நிற்க;

பரோபதேசஞ் செய்யத்தொடங்கிய ஆழ்வார் "நீர்நுமதென்றிவை, வேர்முதன்மாய்த்திறை,சேர்மினுயிர்க்கத,னேர்நிறையில்லே" என்று இந்த இரண்டு குணங்களை அடியோடொழித்து இறைவனையடைவீர்கள்; உயிர்க்கு இத்தோடொத்ததும் மிக்கதுமில்லை என்று அருளிச்செய்தார். இதனாலும் இந்த அஹங்கார மமகாரங்கள் மிகவும் கொடுமையுடையனவென்பது புலனும். "யானேயென்னையறியகிலாதே, யானேயென்றனதே யென்றிருந்தேன்" என்று பெரியார் பணித்தபடி ஆத்மா அஜ்ஞாநத்தில் மூழ்கிக்கிடக்கிறகாலத்தில் இந்த இரண்டு குணங்கள் உண்டாகும். சிறிது தெளிவு பிறந்தபோது 'அந்தோ! எம்பெருமானுக்கடிமையாயிருக்கின்ற ஆத்மாத்மீயவிஷயங்களில் யானெனதென்ற புத்தி பண்ணினேமே' என்று அநுதாபமுண்டாகி ஆத்ம ஸமர்ப்பணஞ்செய்யும்படி நேரும்.

ராஜாவினுடைய ஓர் ரத்னஹாரத்தைத் திருடிக்கொண்டு பின்னர் ராஜா § ஓலக்கமிருக்கும்போது 'இதை நீர் அங்கீகரிக்க வேண்டும்' என்று அதனை மீட்டுங் கொடுப்பதுபோல எம்பெருமானுக்கடிமையாயிருக்கிற ஆத்மவஸ்துவை அவனிடத்தில் ஸமர்ப்பணஞ்செய்வதும் கூடாதசெயலன்றோவெனின்; "ஆத்ம ஸமர்ப்பணமும் ஆத்மாபஹாரத்தோடொக்கும்" என்று ஆனறோர்கள் அருளிச்செய்தார்களேயாயினும், அஜ்ஞாந வேளையில் ஆத்ம ஸமர்ப்பணமும், ஜ்ஞாநவேளையில் அவனுடைமையை அவனுக்கே ஸமர்ப்பிப்பதென்பது திருட்டுத்தனமன்றோ! என்ற அநுதாபமும் பெரியோர்கட்குண்டாவது இயற்கையாதலால் ஆத்ம ஸமர்ப்பணமும் கூடுமென்க.

"எனதாவியுள்கலந்தபெருநல்லுதவிக்கைம்மாறு
எனதாவிதந்தொழிந்தேனினிமீள்வதென்பதுண்டோ
எனதாவியாவியும்நீபொழிலேழுமுண்டவெந்தாய்
எனதாவியார்யானார்தந்தநீகொண்டாக்கினையே"

என்பதும் இங்கறியத்தக்கது.

§ ஓலக்கம்—ஸபையிடம்.

இனி, ஸ்வாதந்த்ர்யம் இவ்வகையான் மிகவும் கௌர்யமுடைய தென்பது நிரூபிக்கப்பெறும்.—

ஆத்மாவுக்கு முக்யலக்ஷணம் எம்பெருமானுக் கடிமையா யிருப்பதே. "மணத்தையும் ஒளியையுங்கொண்டு புஷ்பத்தையும் ரத்னத்தையும் விரும்புமாப்போலே சேஷமென்று ஆத்மாவை ஆத ரிக்கிறது." என்று லோகதேசிகன் அருளிச்செய்ததனாலும் அறிய லாம். ஆத்மாவுக்குப் பெருமையைத் தரத்தக்க சேஷத்வத்தை இந்த ஸ்வாதந்த்ர்யம் அழிக்கு மியல்பிற்றுதலால் இது மிகவும் கௌர்ப் முடையதென்று சொல்லப்பட்டது. இவ்வாறு ஆத்மசக்தியைப் போக்குகின்ற இந்த ஸ்வாதந்த்ர்யபுத்தியை ஆத்மாபஹாரம் என்று வழங்குவார்கள். ஆத்மாபஹாரத்தைக் காட்டிலும் மிக்கதோர் பாபமில்லை. "യൊഽന്യഥാ സന്തമാത്മാനം അന്യഥാ പ്രതിപദ്യതെ, കിം തെന ന കൃതം പാപം ചൊരെണാത്മാപഹാരിണാ" யோய யதா ஸந்தமாத்மாநம் அந்யதாப்ரதிபத்யதே, கிம்தேந நக்ருதம்பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்ற ப்ரமாணத்தாலும் ஆத்மாபஹார முடையவனால் எல்லாபாபங்களுஞ் செய்யப்பட்டதாம் என்று வற் புறுத்தப்பட்டது.

ஒருவன் தேவதாந்தரத்திற்கு அடிமைப்பட்டிருப்பானாகில் அவனையழைத்து 'எம்பெருமான் ஸர்வகாரணமாயும், ஸர்வரக்ஷக மாயும், ஸர்வசேஷியாயுமிருக்குமியல்பினன்; நீ ஸ்வாமியாகக் கொண்டுள்ள தெய்வத்திற்கு இவ்வளவு குணங்களொன்றுமில்லை யன்றோ!' என்று அறிவித்தால் அவன் இவ்வுபதேசத்தைக்கேட்டு முன்பே சேஷத்வத்திற் கிசைந்தவனாதலால் தன் கொள்கையி னின்றும் திரும்புவான். இந்த ஸ்வாதந்த்ர்யமுடையவன் எவ்வகை யினும் சேஷத்வத்திற் கிசையாதவனாதலால் இவனை எவ்வுபதேசத் தாலும் நன்னிலைமைக்குக் கொண்டுவருவதென்பது இயலாது. ஆக, இதுவரையும் ஸ்வாதந்த்ர்யம் ஆத்மசேஷத்வத்தை அழிக்கும் வகையான் கொடுமையுடையதென்று சொல்லப்பட்டது. இனி, இதனையோர் ஐதிஹ்யமுகத்தானும் விளக்கியுரைக்கப்பெறும்.—

உடையவர் திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்தகாலத்தில் மேல் நாட்டிலுள்ள சில ஸ்ரீவைஷ்ணவர்கள் எம்பெருமானாரை ஸேவிப் பதற்காக திருவரங்கம்வந்து வீதியிலுள்ள சில ஸ்ரீவைஷ்ணவர்களைப் பார்த்து 'எம்பெருமானர் மடமெது?' என்று கேட்டார்கள். அவர்

கள் 'எந்த எம்பெருமானார் மடத்தைக்கேட்கிறீர்கள்' என்று வினவ புதிதாக வந்தவர்கள் மனவருத்தமுற்று 'நீங்கள் இங்ஙனம் கூறுகின்றீர்களே; தர்சநத்திற்கு இரண்டு எம்பெருமானாருண்டோ?' என்று கேட்டார்கள். அவர்களும் அருளாளப்பெருமாளெம்பெருமானார் மடமுமொன்றுண்டன்றோ! ஆகலால் இவ்வாறு சொன்னோமென்றனர். இவ்வுரையைக்கேட்ட அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் 'நாங்களவரையறியோம், உடையவரைக்கேட்டோம்' என்ன அப்படியானால் 'உடையவர்மடம் இது' என்று சுட்டிக்காட்டினார்கள். அந்த ஸ்ரீவைஷ்ணவர்களும் உடையவர்மடத்திற்புகுந்து எம்பெருமானாரை யடிவணங்கிநின்றார்கள். இஃதிங்ஙனமிருக்க;

இந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருவரை ஒருவர் இவ்வாறு வினவிக்கொண்டிருந்ததை அருளாளப்பெருமாளெம்பெருமானார் கேட்டு 'அந்தோ! நமக்குள்ள ஸ்வாதந்தர்ய புத்தியாலன்றோ எம்பெருமானாரைவிட்டுப்பிரிந்து ஓர் மடத்தைக்கட்டுவிக்க அதனால் லோகத்தார் நம்மை எம்பெருமானாருக் கெதிர்த்தட்டாகச் சொன்னார்கள்; இதனால் நாம் அநர்த்தப்பட்டுவிட்டோம்' என்று அப்பொழுதே தம்முடைய மடத்தையிடித்துப்போகட்டுவிட்டு எம்பெருமானார் மடம் வந்து உடையவர் திருவடிகளில் தண்டன் ஸமர்ப்பித்துக் கண்களில் நீர்பெருக 'அநாதிகாலம் இவ்வாத்மா தேவரீர் திருவடிகளை யகன்று அநர்த்தப்பட்டுப்போனது போராமல் மேலும் தேவரீரை விட்டகன்று ஸ்வாதந்தர்யத்தால் மோசம்போனேன்; இனியாவது அடியேனைத்தள்ளிவிடாமல் அங்கீகரிக்கவேண்டும்' என்று வேண்டி நின்றார். எம்பெருமானாரும் வியப்புற்று என்னவிஷயம் என்று வினவினார். அருளாளப் பெருமாளெம்பெருமானாரும் நிகழ்ந்த விஷயத்தை விண்ணப்பஞ்செய்து தேவரீர் இன்று தொடங்கி நிழலுமடிதாறும்போலே திருவடிகளின் கீழேவைத்துக்கொண்டு நித்யகைங்கர்யங் கொண்டருளவேண்டும்' என்று பிரார்த்தித்தார். எம்பெருமானாரும் அவருடைய பிரார்த்தனையின்படி தம்முடைய ஸந்நிதியைவிட்டு ஒருக்ஷணமும் பிரியாமல் வைத்துக்கொண்டு ஸகலார்த்த விசேஷங்களையும் பிரஸாதித்தருளினார்.

இங்கு அருளாளப்பெருமாளெம்பெருமானார் ஸ்வாதந்தர்ய லேசமிருக்கினும் அது அநர்த்தமாமென்று தமது மடத்தையும் இடித்துவிட்டனர் என்றதனால் ஸ்வாதந்தர்யத்தின் பொல்லாங்கு இவ்வளவென்று வெளியாயிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ
V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(196-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்விடத்தில் கிரியஜ்ஞ விருத்தாந்தத்தைப்பற்றிக் கொஞ்சஞ் சொல்லி இவ்வதிகாரத்தை முடிப்பாம். பிருந்தாவனத்தில் கோவர்த்தனமென்றவோர் பருவதமிருந்தது. தற்காலத்திலு மிருக்கிறது. இது பிருந்தாவனத்தின் எல்லையோர மிருந்தது. இப்பருவதத்தின் தற்கால ஸ்திதியை நோக்குங்கால் ஏதோவொரு பிராகிருதிகவிப்லவத்தால் உயரக்கிளப்பப்பட்டு மறுபடியும் கீழே தள்ளப்பட்டது போல் காணப்படுகிறது. அநேக ஆயிரவருஷகாலங்களாய் இந்த சிறு மலையானது இந்நிலைமையிலேயே இருக்கிறது. இக்காரணத்தைக்கொண்டே ஸ்ரீ கிருஷ்ண பகவான் இக்கிரியை மேலே தூக்கி ஏழு நாட்கள்வரை கையால் தாங்கிக்கொண்டு மறுபடியும் கீழே வைத்தாரென்கிற உபந்யாஸம் ஏற்பட்டதுபோலும்

உபந்யாஸம் இவ்விதமாயிருக்கிறது. வருஷக் கடைசியில் நந்தன் முதலிய கோபர்கள் வருஷந்தோறுமொரு இந்திரயக்ஞம் செய்வதுண்டு. அந்த யக்ஞத்தை நிறைவேற்றுவதற்காகவவர்கள் ஒருகால் யோசனை செய்தார்கள் இதைப்பார்த்து ஸ்ரீ கிருஷ்ணன் இஃதெதற்காகவென்று வினவினன். இந்திரன் விருஷ்டியைச்செய்வான். விருஷ்டியால் ஸஸ்யங்களுண்டாகும். ஸஸ்யங்களை யுண்டு நாமும் நம்மைச்சார்ந்த கோபர்களும் ஜீவனம் செய்வோம். இவ்விதமாகப் பசுக்கள் பால் நிரம்பக்கொடுக்குமாகையால் இந்திர பூஜை புரிதல் மிகவும்அவசியம் என நந்தகோபர் விடையளித்தார். இதற்கு ஸ்ரீ கிருஷ்ணன் பதில் கூறியதாவது.— நாம் கிருஷிகர்களல்ல; நாம் பசுக்களை மேய்த்து ஜீவனஞ் செய்பவர்கள்; ஆதலால் பசுக்களுக்குப்

பூஜை செய்வதும் அவைகளுக்கு உத்தமமான ஆகாரங்கொடுப்பதுமே நம்மால் செய்யவேண்டியது; நாம் இப்பருவதத்தை யாச்ரயித்து இதையே பூஜை செய்வோம்; பிராமணர்களுக்கும் பசியால் வருந்துவோருக்கும் உணவளிப்போம்; பசியால் வருந்துகிற அநேக தீனதரித்திரர்களுக்கும் அவ்வேழைகளின் மத்தியில் பிராமண ஜனங்களுக்கும் போஜனஞ் செய்விப்போம்; பசுமாடுகளை நன்றாய் மேய்ப்போம்; சோவர்த்தனம் உருக்கொண்டதுபோல் குவியல் குவியல்களாக அவ்வன்னங்களையும் வ்யம்ஜனங்களையும் எளியோருக்குக்கொடுப்போம்.

இதனால் இந்திரயக்ஞம் நடைபெறவில்லை. இந்திரனுக்குக் கோபம் மூண்டது. கல் மழையாய் வருஷித்து பிருந்தாவனத்தை மூழ்துவிக்கும்படி மேகங்களுக்குக் கட்டளையிட்டான். மேகங்களும் அக்கட்டளையை நிறைவேற்றின. பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் கோபர்களுக்கும் உண்டான துக்கத்துக்கு எல்லையில்லை. ஸ்ரீ கிருஷ்ணன் அப்பொழுது கோவர்த்தனத்தைத் தூக்கி மழை கீழே விழாதபடி தடுத்தான். பிருந்தாவனம் ரக்ஷிக்கப்பெற்றது.

இந்திரன் தான் தோல்வியடைந்ததாக வுணர்ந்து ஸ்ரீ கிருஷ்ணனுடன் ஸந்தி செய்துகொண்டான். மஹாபாரதத்தில் சிசுபால வாக்யத்தில் இந்த கிரியஜ்ஞத்தைப்பற்றி கொஞ்சம் சொல்லப்பட்டுளது. ஸ்ரீ கிருஷ்ணன் வல்மீகத்துக்கு ஒப்பான கோவர்த்தனத்தைக் கையால் தூக்கினனென்பது ஓர் ஆச்சரியமான கதையா? என்று சிசுபாலன் கூறினன். கிருஷ்ணனல் பிறருக்கு அளிக்கப்பட்ட அன்னம், காய்கறிகள் இவைகளைப்பற்றி ஓர் குறிப்புளது. ஸ்ரீ கிருஷ்ணன் இப்பருவதத்தைக் கையால் தூக்கி ஏழுநாள் பரியந்தம் தாங்கியிருக்க முடியுமா? ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஈசுவராவதாரமென்றவர்கள் கொள்கிறார்களோ அவர்கள் ஈசுவரருக்கு எக்காரியந்தான் செய்யவியலாதென்று வினவக்கூடும். அவர்களை நாம் கேட்போம். ஈசுவராவதாரமான ஸ்ரீ கிருஷ்ணன் பருவதத்தைத் தாங்கியதால் யாது பயன்? எவருடைய இச்சையின்றி முகில் ஓர் துளியும் வருஷிக்காதோ அப்பகவான் ஜனங்களை மழையினின்றும் காப்பதற்காக ஏழுநாள் வரை மலையைச்சுமப்பது எதற்காக? எவருடைய இச்சை மாத்திரத்தினல் கோரமேகங்களும் விலகிவிடுமோ மழை

நின்றுவிடுமோ ஆகாயம் நிர்மலமாகிவிடுமோ அப்பகவான் பருவ தத்தை ஏழுநாள் சுமக்கவும் வேண்டுமோ?

இது ஈசுவரனின் லீலையென வேறு சிலர் கூறக்கூடும். பகவானுடைய லீலையை நாமறியமுடியுமா? இது சரியே. பிரயோஜனமின்றி ஈசுவரன் லீலைக்காக மலையைத் தாங்கினுரென்று கொள்வோமானுல் ஈசுவரன் நிஷ்பரயோஜனமாக யாதொரு காரியத்தையும் செய்வானுவென்று நாமவர்களைத் திருப்பிக்கேட்போம். ஆகையால் நாம் முன்பெடுத்துக்கொண்ட சித்தாந்தத்தை யனுசரித்தே இந்த கிரிதாரண கதையையோர் விசித்திர உபந்யாசமாகக் கொள்வோம். இதிலிருந்து நாமொரு வுண்மை தெரிந்துகொள்கிறேம். ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோபர்களை இந்திரயஜ்ஞம் செய்வதிலிருந்து தடுத்து கிரியக்ஞத்தை நடத்தும்படி ஏவினுரென்பது. இது சம்பந்தமான இதர கதைகள் அநைஸர்க்கங்கள். (இயல்புக்கு மாறுனவைகள்.)

இவ்விதமான கதையில் ஒரு ஆழ்ந்த தாத்பரியங் காணப்படுகிறது. இச்சகத்துக்கு ஒரே ஈசுவரர். அவரைத்தவிர வேறு ஒரு ஈசுவரரில்லை. இந்திரனென்று வேறு ஓர் தேவதையில்லை. உடியா தா-வஷடிடுணெ (வருஷித்தல்) அதின்பேரில் ரக்விகுதியைச்சேர்த்தால் இந்திரசப்தம் வருகிறது. இந்திரனென்றுல் வருஷிப்பவன். விருஷ்டியை உண்டாக்குபவன் யார்? எவன் ஸர்வவியாபியோ அவனே விருஷ்டி செய்பவன். விருஷ்டிக்காக வேறு ஒரு விதாதாவைக் கற்பனைசெய்வது நம்பவொண்ணுது. ஆகையால் இந்திரனைக்குறித்து ஈசுவர புத்திபால் யக்ஞம்செய்வது பொருந்தும். ஈசுவரர் அநந்தப்பிரகிருதி. அவர் அநந்தகுண விசிஷ்டர். அநந்தமான செயலுள்ளவர். அநந்தமான சக்திமான். அவருடைய செயல்களைக் கணக்கிட முடியாது. இவ்விதமிருக்கிற அந்த ஈசுவரனை யெவ்விதம் தியானம் செய்வது? ஈசுவரரின் ஒவ்வொரு சக்தியையும் வேறுபடுத்தி நமக்கு இயன்றவளவு உபாசிக்கலாம். இவ்வுலகில் காண்கிற ஒவ்வொரு பதார்த்தத்திலும் அவர் சக்தி விளங்குகிறது. இம்மாதிரியாக அநந்தரான ஈசுவரனைத்தியானித்தல்கூடும். இதனுலேயே பிராசீன ரிஷிகள் ஜகத் ஸ்ருஷ்டாவான ஈசுவரனைத்

தியானித்து சூரியனிடத்திலும் அவருடையஸவ-டு சூவாகதாவ (எல்லாவற்றையும் மறைத்தல்) மனதில் நினைந்துவருணனிடத்திலும் அவருடைய மஹா தேஜஸ்ஸைச் சிந்தையிற்கருதி அக்னியிடத்திலும், அவர் ஜகத்துக்குப் பிராணனுயிருக்கிருரென்பதையுணர்ந்து வாயுவினிடத்திலும், இவ்விதமவருடைய ஒவ்வொரு சக்தியையும் நினைந்து நினைந்து வேறு வேறு பதார்த்தத்திலும ஈசுவரபாவனைசெய்து உபாஸிததிருக்கிருர்கள். அவருடைய "வருஷிகாரிணீ" ஆனசக்தியை இந்திரனுகப்பாவித்து உபாஸனை செய்தார்கள். நாளடைவில் உபாஸனையில வாஸ்தவார்த்தத்தை ஜனங்கள் மறந்து அவ்வுபாஸனைகளின் வெளித்தோற்றத்தைமட்டும் கவனிப்பவர்களானுர்கள். இவ்விதமாகவே சகல தர்மத்தின் தத்வத்தையும் ஜனங்கள் மறந்துவிட்டார்கள். வெளிவேஷம்மட்டும் எஞ்சியது. ஸ்ரீகிருஷ்ணபகவான் தர்மத்தின் தத்துவத்தையும் உபாஸனையின் வாஸ்தவார்த்தத்தையும் ஜனங்களுக்குப் போதிபபதின்பொருட்டு பிரயத்னம் செய்தார். அவர் முதியவயதில் எந்த தர்மோபதேசத்தச்செய்தாரோ அதே உபதேசத்தை இளவயதில் கிரிபஜ்ஞம் என்கிற காரியத்தால் உபதேசித்தருளினுர். ஜகதீசுவரன் எல்லாபூதத்திலுமிருக்கிருர். மேகத்திலுமிருக்கிருர். பசுவிலுமிருக்கிருர். கன்றினிடத்திலுமிருக்கிருர். மேகத்தையோ ஆகாசத்தையோ பூஜை செய்தால் அவருடைய பூஜையாகவேயிருக்குமென்றுல் மலையையும் பசுக்களையும் பூஜை செய்வதால் அவருடைய பூஜையாகவே முடியும். ஆனுல் எல்லாவிடத்திலும் ஈசுவர பாவனைசெய்து பூஜை செய்தல்வேண்டும். ஆகாசம் முதலிய ஜடபதார்த்தங்களைப் பூஜிப்பதைக்காட்டிலும் தரித்திரர்களுக்கும் பசுக்கன்றுகளுக்கும் வயிருர உணவளிப்பது மிகவும் தர்மானுஸாரமாகும். கிரியஜ்ஞத்தின் தாத்பர்ய மிதுதானென்பது பொருந்தும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

பக்தி நிரூபணம்.

[இது ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு சிங்கராசார்ய்ஸ்வாமி எழுதுவது.]

(181-ம் பக்கத்தொடர்ச்சி.)

இந்த பக்தியானது மற்ற உபாயாந்தரநிஷ்டனுடைய பக்தியைப்போலன்றிக்கே விலக்ஷணையாயிருக்கும். எப்படியென்றால் "ஸுஷேஸ்வாயம் ஊொஹெ்யாயம்" "அச்சேத்யோயம் அதாஹ்யோயம்" என்கிறபடியே சேதநதஹநாநர்ஹமான ஆத்மவஸ்துவை "வல்வினையேனையீர்கின்றவே" "வேமெனதாருயிர்" என்கிறபடியே சேதநபேதநார்ஹமாகப் பண்ணும்.

அது நிற்க, வேறு காரணத்தாலே சோகத்தையுடைய திர்யக்பதார்த்தங்களைப்பார்த்துப் பகவதலாபத்தாலே நோவுபடுகின்றனவாகக்கொண்டு "கூாஙிவிஐவஙிகூம் வீதநிஜூாநெஸெஷெ" "குரரிவிபெஸித்வம் வீதநித்ராநசேஷே" என்கிறபடியே அவைகளைத் தன்னோடு ஸமாநதுக்கங்களாக நினைத்துக் கட்டியழும்படி செய்யும்.

இப்படிப்பட்ட பக்தி விசேஷத்தோடு கூடின ஆழ்வார் விஷயத்தில் பக்தி சபலனான ஸர்வேசுவரன் காமிநிவிஷயத்தில் காமுகன் தலைதடுமாறாக சேஷசேஷிபாவம் மாறுடுவதுபோல் ஸம்ஶ்லேஷியாநிற்கும். இந்த விஷயத்தைக்கண்டு ஆழ்வார் ஈடுபட்டு "வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணிலென்று, ஆர்வுற்றவென்னையொழிய என்னில் முன்னம், பாரித்துத்தானென்னை முற்றப்பருகினான்" என்று இப்படி சபலனாயிருந்துள்ள ஈசுவரனைத் தான் விழுங்குவனென்று பாரிக்கிறபடியைக்கண்டு என்னை திருவத்ரவ்யமாக்கிப் பருகினான் என்றருளிச்செய்தார்.

"வூவஜ:" "பூர்வஜ:" என்கிறபடியே இந்த அவஸ்தாவிசேஷங்களுக்கு கிருஷிபண்ணின ஈசுவரன் இந்த அவஸ்தைகளை

யுண்டாக்கித் தான் அநுபவித்து இனியனுக அதைப்பார்த்து உருகி நீர்ப்பண்டமாக ஆழ்வார் கரைந்தபடி ஏற்படுகிறது.

இதுவுமன்றி ப்ரணயாதிக்கத்தாலே அவன் க்ஷணம் விளம்பிக்க அது பொறுக்கமாட்டாமல் ஊடலையுடைத்தானவராயிருக்குமிருப்பைப் பேசும்படியாயுமிருக்கும். இந்த விஷயங்கள் விஷயாதேசங்களில் அநுபவஸித்தங்களே.

இப்படி இந்த பக்திவிசேஷத்தால் உத்துங்கமான பகவத் விஷயத்திற்கு க்ஷுத்ரனுன தன்னுடைய ஸம்பந்தத்தாலே அவத்யம் ஏற்படுமோவென்று சங்கித்து ஈசுவரனை விட்டகன்று தான் முடிந்தாலும் அத்தலைக்குக் குறைவுவாராமலிருக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கும்படியாயிருக்கும்; இது "வளவேழுலகு" என்கிற திருவாய்மொழியில் வ்யக்தமாகும்.

அப்படியே அஸ்தாநேபயசங்கையை யுண்டுபண்ணி ஸர்வோத்துங்க விஷயத்தில் மங்களாசாஸநத்தைப் பண்ணும்படி செய்யும்.

"யாப்ரீதிரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ। த்வாமநுஸ்மரதஸ்ஸாமே ஹ்ருதயாந்மாபஸர்ப்பது" "யாப்ரீதிரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ, த்வாமநுஸ்மரதஸ்ஸாமே ஹ்ருதயாந்மாபஸர்ப்பது" என்று ப்ரஹ்லாதாழ்வான், விஷயாந்தரங்களிலிருக்கும் ப்ரீதிபோலுள்ளதொரு ப்ரீதிவிசேஷத்தை ப்ரார்த்தித்தபடியாலே அவ்விஷயாந்தரங்களிலிருக்கும் ப்ரகாரவிசேஷங்களை அதிதேசிக்கும்படியாயிருக்கும்.

இப்படியாக ஆழ்வாருடைய பக்தி விசேஷத்தில் ப்ரகாரபேதம் மட்டும் நிரூபிக்கப்பட்டது. இனி விஸ்தரபயத்தால் மற்ற விஷயங்களை நிறுத்தி விட்டேன். "வீடுமின்" ப்ரவேசத்தில் திருவாய்மொழிக்கு பக்திபரமான ஒரு நிர்வாஹமும், ப்ரபத்திபரமான ஒரு நிர்வாஹமும் அருளிச்செய்திருக்கிறார். அந்த விஷயங்களில் விசாரிக்கவேண்டிய அம்சங்கள் விசாரிக்கப்படும்.

தொடரும்.

ஸ்ரீ:

நசிகேதோபாக்யானம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் ந்யாய வேதாந்த வித்வான்
ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸகோபாலாசார்ய ஸ்வாமீ எழுதுவது.]

(214-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு நசிகேதஸ்ஸு சொன்னவார்த்தையைக்கேட்ட யமதருமன் 'நாம் சிஷ்யனை எவ்விதம் பரீக்ஷிக்கவேண்டுமோ அவ்விதமெல்லாம் பரீக்ஷித்தோம்; இவன் மோக்ஷமொழிந்த மற்ற புருஷார்த்தங்களை யொருபொருட்படுத்தாது மோக்ஷத்தையே முக்ய புருஷார்த்தமாகக்கொண்ட சலங்கா நெஞ்சு படைத்தவனாகவிருக்கின்றான்; ஆதலால் இவன் மோக்ஷோபாயமான ப்ரம்மவித்யையை உபதேசமுறையில் பெறுதற்குரியவனாவான்' என்று மகிழ்ச்சியுற்று மோக்ஷத்தை விரும்புகின்றவர்களை ஸ்தோத்திரஞ்செய்யத் தொடங்கினான்.

நசிகேதஸ்ஸே! மிகவும் மேன்மைதங்கிய மோக்ஷத்தின் மார்க்கமும், இஷ்டத்திற்கு விஷயமாயுள்ள விஷய சுகாதிகளின் மார்க்கமும் இயல்பினால் வேறுபாடுடையன. மோக்ஷத்தை சிரேயஸ்ஸென்றும், விஷயசுகாதிகளை ப்ரேயஸ்ஸென்றும் வழங்குவர். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று விலக்ஷணமான பிரயோஜனத்தை முக்யமாகக்கொண்டு புருஷர்களைத் தன் வசமாக்கிக் கொள்கின்றன. இவ்விரண்டு மார்க்கங்களுள் சிரேயஸ் மார்க்கத்தையடையவேண்டுமென்றி விருப்பமுடையவனுக்கு அழிவில்லாத சிறந்த மங்களமுண்டாகிறது. எவன் விஷயசுகமென்ற ப்ரேயோ மார்க்கத்தை விரும்புகிறானோ அவன் பரமபுருஷார்த்தமான மோக்ஷத்திலிருந்தும் நழுவினவனாவான். சிரேயஸ், ப்ரேயஸ் என்ற இவ்விரண்டும் நீரிற்கலந்த பாலைப்போல பிரித்துணர்தற்கு அரியனவாயிருக்கும். நீரிற்கலந்த பாலைப்பிரிக்கும் ஹம்ஸபக்ஷிபோன்ற பரமஹம்ஸர்களாகிய பெரியார்கள் ப்ரேயஸ்ஸைக்காட்டிலும் மிகவும்

உயர்ந்ததாகிய சிரேயஸ்ஸை விரும்புகிறார்கள். மந்தபுத்தியையுடையவர்கள் * யோக † க்ஷேமத்தினிமித்தமாக ப்ரேயோ மார்க்கத்தை விரும்புகிறார்கள். நீ மஹாதீரர்களால் விரும்பத்தக்க மோக்ஷத்தையே விரும்பினை; இதோ எதிரே நிற்கின்ற அப்ஸரஸ்திரீகளையும், பலவகையான திரவியங்களையும் அடைவது துக்கத்திற்குக்காரணமேயன்றி வேறில்லையென்று நினைத்து அவைகளை விலக்கிவிட்டனை; ஆதலால் உன்னையும் அந்தத்தீரர்களுள் ஒருவனுகவே நினைக்கிறேன்; பலர் பொருளிலாசைகொண்டு அப்ஸரஸ்திரீகள் முதலான விஷய சுகங்களிலே ஆழ்ந்து விடுகின்றார்கள்; ப்ரஸித்தமான காமகர்ம ஸ்வரூபமான வித்யையும், வைராக்ய தத்வஜ்ஞானரூபமான வித்யையும் ஒன்றுக்கொன்று விரோதமான பலன்களைக்கொடுக்கு மியல்பின; உன்னை யான் பலவகையாலும் பரீக்ஷித்தும் நீ அந்த விஷயங்களில் ஆசையற்றவனுயிருந்தனை யாதலால் உன்னைத் தீரர்களுக்குள் மேன்மைவாய்ந்தவனுகவே அறிகிறேன்.

முன் குறிப்பிடப்பெற்ற அவித்யை என்கிற காமகர்மாவின் நடுவில் கனமுள்ள வஸ்துபோலக்கிடந்து புரள்கின்றவர்களாயும், தம்மை சாஸ்திரங்களில் பண்டிதர்களென்று கர்வங்கொண்டவர்களாயுமிருக்கின்ற அவிவேகிகள் ஜரை ரோகம் முதலியவற்றால் பீடிக்கப்பெற்றவர்களாய், பிறவிக் குருடர்களால் வழிகாட்டப் பெற்றுச் செல்லும் பிறவிக்குருடர்போலத் தவிக்கின்றனர். மேலும் மேன்மை பொருந்திய வைகுண்டத்தையடைவதற்குச் சாதனமாயுள்ள வியாபாரங்கள் அவர்கட்குத் தோன்றுவதில்லை. இன்னும் அவர்கள் கர்வமுற்று ஜ்ஞாநமற்றவர்களாயிருப்பதால் விஷயசுகமென்ற பேராசைக்காட்பட்டு இந்த லோகத்தில் அநுபவிக்கத்தக்க சுகந்தான் சுகம்; பாரலௌகிகமான நித்யவிபூதி முதலானவை ஒன்றுமில்லையென்று எண்ணுகின்றார்கள். இங்ஙனம் கருதுகிற இவர்கள் ஒவ்வொரு ஜன்மாவிலும் என்னுற் செய்யப்படும் மஹத்தான கஷ்டங்களுக்காளாகிறார்கள்.

---

* யோகம்—கிடையாத பொருள் கிடைப்பது.

† க்ஷேமம்—கிடைத்த பொருளை ஸம்ரக்ஷிப்பது.

இன்னும் § பிரஸித்தனான பரமாத்மா ஒருவன் உண்டென்று அநேக புருஷர்களுக்குள் ஒருவனே சிரவணஞ் செய்கிறான். இங்ஙனஞ் சிரவணஞ் செய்யப்பட்ட பலருள் ஒருவனே அந்த ஸ்ரீய:பதியான ஸர்வேசுவரனிடத்தில் அநந்யவிஷயமான பிரீதியுடன் கூடியவனாகிறான். இவ்வாறு பிரீதியுற்ற பலர்கட்குள் ஒருவனே பரமாத்மாவின் ஸாக்ஷாத்காரம் பெற்றவனாகிறான். இதனால் பிர்ம்ம வித்துக்களாயிருப்பவர் மிகவும் அரியரென்பது வெளியாகிறது. இது நிற்க;

சிலர் பாண்டித்யத்தை மாத்திரம் பிரயோஜனமாகக்கொண்டு வேதாந்தத்தைச் சிரவணஞ் செய்கிறார்கள். இவர்கள் சிரவணஞ் செய்ததை மனனஞ் செய்தல், தியானித்தல் முதலிய ஸ்வாநுபவமற்றுச் சரீராபிமானமுள்ளவர்களாயிருப்பார்கள். இவர்கள் ஒருபோதும் பரமாத்மாவை யறியமாட்டார்களென்று நீ நிச்சயமாக அறிவாயாக. தர்க்கிக்கின்ற வாதியராலும், ஸம்சயமுடைய தேகாபிமானியராலும் மிகவும் ஸூக்ஷ்மமாயுள்ள அணுவுக்கணுவாயிருக்கும் பரமாத்மாவின் ஸ்வரூபம் நன்கறியவொண்ணாது.

நசிகேதஸ்ஸே! பரமாத்மாவின் ஸ்வரூப உண்மையை அறிதற்கு ஓர் பரமாசார்யனுடைய உபதேசத்தினாலுண்டாகின்ற ஞானமே சாதனமாயிருக்கும். அத்தகைய ஜ்ஞாநமெதுவென்று கேட்பையேல் உனக்கு இப்பொழுதுண்டாயிருக்கின்ற ஞானமே யாகும். நிலைநின்றதான மோக்ஷத்தின் உபாயமான பிர்ம்ம வித்யையை அடைந்தனை. உன்னை மிகவும் மெச்சினேன். உன்னை யான் சிஷ்யனாகவடைவதற்குப் பெரும்பாக்யமுடையவனானேன். யாவராலும் சிறப்பித்துக் கொண்டாடப்படுகின்ற குபேர ஐசுவர்யம்போன்றுள்ளவை எல்லாம்

---

§ இவ்வர்த்தத்தைக் கீதாசார்யனும்,

"𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌷𑍁 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌯𑌤𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 ।
𑌯𑌤𑌤𑌾𑌮𑌪𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌂 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ॥

"மநுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கச்சித்யததி ஸித்தயே
யததாமபி ஸித்தாநாம் கச்சிந்மாம் வேத்தி தத்வத:

என்று அருளிச்செய்தனன். இதுவும் இங்கறியத்தக்கது.

அநித்யமென்றே யானறிவேன். அநித்யமான விஷயத்தைப்பற்றிய உணர்வால் நித்யமான பரமாத்மாவின் ஸ்வரூபம் எங்ஙனமறியலாகும்? நான் பிர்ம்மப் பிராப்திக்குச் சாதனமாயுள்ள ஜ்ஞாநத்தையடைவதற்காக அநித்யமான இஷ்டகாதிகளால் நாசிகேதாக்னியை உபாசித்தேன். அதனால் பிர்ம்ம வித்யையைப் பெற்றேன். இங்ஙனம் பெற்றதனால் பிர்ம்ம பிராப்திக்கு ஜ்ஞாநமொன்றே காரணமாகுமென்று தெரிந்துகொண்டேன்.

நசிகேதஸ்ஸே! நீ பிர்ம்மாவின் ஸ்தானமான ஸத்யலோகம் வரையிலுமுள்ள சகல ஸ்திரீ விஷயமான இஷ்டப்ராப்திக்குக் காரணமாயுள்ள பல யாகங்களைச் செய்யாமல், அழிவற்றதாயும், பயமற்றிருப்பதற்கேதுவாயும் ஸத்யஸங்கல்பாதி மஹாகுணங்களுடைய பரமாத்மா எழுந்தருளியிருப்பதற்கு ஸ்தானமாயுமிருப்பது மோக்ஷமென்றே நிச்சயித்தனை. இதனால் நீ நுண்ணிய அறிவு படைத்தவனென்பது வெளியாகிறது. ஆகையாலன்றோ லௌகிகமான விஷயசுகாதிகளிற் சிறிதும் கருத்து வைக்காமல் அவைகளை ஒழித்தனை. அஜ்ஞானத்தால் மறைக்கப்பட்ட ஸர்வ பூதங்கட்கு அந்தர்யாமியாயும், ஹ்ருதயகமலத்தில் வசிப்பவனுயும், கண்களால் காண்டற்கரியனுயும், பிறப்பிறப்பற்றவனுயுமிருக்கின்ற ஸர்வேசுவரனுடைய இயல்பை நன்கறிந்த பெரியோர்கள் "யவெசு வூாஜ உநவஸி வூாஜூ:, யஹாவஷாவதிஷ்தெ ஜூாநாநி உநஸாஸஹ" "யச்சேத் ப்ராங்மநஸி ப்ராஜ்ஞ:, யதாபஞ்சாவதிஷ்டந்தே, ஜ்ஞாநாநி மநஸாஸஹ" என்றபடி மனதை விஷயசுகங்களினின்று மீளும்படி செய்து, அவ்விஷயசுகங்களின் லாபாலாபத்தாலுண்டாகின்ற சுக துக்கங்களைவிட்டு ஆத்மாவிடத்திற் சேர்ப்பித்தல் என்ற அத்யாத்ம யோகத்தால் பரமாத்மாவை யடைகிறார்கள். இவர்கள் ஸ்ரீவைகுண்டத்தில் * அபஹத பாப்மத்வாதிரூபமான எண்குணங்களையும், பரமாத்மாவின் ஸாரூப்யத்தையும்பெற்று நித்யானந்தமடைகிறார்கள்.

* எண் குணங்களாவன.— அபஹதபாப்மத்வம், விஜரத்வம், விம்ருத்யுத்வம், விசோகத்வம், விஜிகித்ஸத்வம், அபிபாஸத்வம், ஸத்யகாமத்வம், ஸத்யஸங்கல்பங்களென்பன. (பாபமின்மை, நரையின்மை, சாவின்மை, சோகமின்மை, ஸம்சயமின்மை, தாகமின்மை, சத்யகாமம், சத்யசங்கல்பம்.)

† நீயும் ஒப்புயர்வற்ற மோக்ஷமடைதற்கு யோக்யமானவனுயிருக்கின்றனை யாதலால் இப்பொழுது நான் உனக்குப் பிர்ம்ம வித்யையை உபதேசிக்க விரும்புகிறேன்.

நசிகேதஸ்ஸே! வேதங்கள் யாதொன்றின் ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்தாகவோ பரம்பரையாகவோ ப்ரதிபாதிக்கின்றனவோ, ஸமஸ்தமான தபஸ்ஸுகளும் எந்த வித்யையைக் கூறுகின்றனவோ, எந்த வித்யையை உபாஸிக்கவேண்டுமென்ற விருப்புடையவர்கள் குருகுலவாசத்தையும் ஸ்திரீசங்க பரித்யாகத்தையும் அநுஷ்டிக்கின்றனரோ அத்தகைய மஹாவித்யையை உனக்கு சுருக்கமாகச் சொல்லுகிறேன். அது ப்ரணவமாகிய ஓங்காரமாம். இந்த அக்ஷரத்தையே பிர்ம்மமென்றறிவாயாக. "ஓமித்யேதேனைவாக்ஷரேண பரம் புருஷமபித்யாயீத" "ஓமித்ய நேனைவாக்ஷரேண பரம புருஷ மபித்யாயீத" என்றபடி பிர்ம்மத்தை யடைவதற்குச் சாதனமான வித்யையைப் பிர்ம்மமாகச் சொல்வதுண்டு விரைவில் கார்யமுண்டாவதை முன்னிட்டு, 'தண்டுல: பசதி' (அரிசி சமைக்கிறது) என்று கர்ம கர்த்தரிப்ரயோகமாக வ்யவஹரிப்பதுபோல இதுவும் லாக்ஷணிகமான வ்யவஹாரமாகும். இந்தச் சிறப்புடைய அக்ஷரமே த்யாநம் செய்வதற்கும், ஜபஞ் செய்வதற்கும் உரியது. எவன் எந்தப் பரமபுருஷார்த்தத்தை யடையவேண்டுமென்ற இச்சையோடு இந்த மந்த்ரத்தை உபாசிக்கிறானே அவன் அதை நிச்சயமாக அடைவானென்பதில் சந்தேகமில்லை. இந்த மந்த்ரத்தைக் கடைப்பிடித்தவர்கட்கு நித்யவிபூதியாகிய பரமபதப்ராப்தியுண்டு. ஜீவன் நாசத்தையடைந்து விடுகின்றானே அவன் எப்படி மோக்ஷத்தை யடையக்கூடும்? என்று நீ ஒருவகையான் சந்தேகப்படுவையேல் அதற்குச் சமாதானஞ் சொல்லுகிறேன். ஜீவனுக்குப் பிறப்பும், இறப்புமில்லை. இந்த பஞ்சபூதத்தாலாகிய சரீரத்திற்கு உத்பத்தி நாசமுண்டு. இவன் ஜ்ஞாந ஸ்வரூபன். ஒருவனால் இவனுக்கு நாசமென்பதில்லை. ஒருவனால் மற்றொருவனுடைய சரீரத்திற்கு நாசமுண்டாமிடத்து இவனுக்கு நாசமே கிடையாதென்று அறிவாயாக.

(தொடரும்.)

---

† "ஏஷ ஸம்ப்ரஸாதோ(அ)ஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதி ரூபஸம்பத்ய ஸ்வேன ரூபேணாபி நிஷ்பத்யதே" "ஸ தத்ர பர்யேதி ஜக்ஷத் க்ரீடந் ரமமாண:" என்ற சுருதியின் பொருளும் இங்கறியத்தக்கது.

ஸ்ரீ:

சில தனிப்பாடல்கள்.

காளமேகப்புலவர்.

இப்புலவர் திருமோகூரிற் சோழியப்பிராமண குலத்திற் பிறந்து அத்திருப்பதித் திருமால் திருநாமமாகிய காளமேகம் என்று நாமம் சூட்டப்பெற்றுத் திருவரங்கம் பெரியகோயிலில் திருமடைப் பள்ளிக் கைங்கர்யத்தை மேற்கொண்டொழுகிவருங்கால் முன் நல் வினைப்பயனாற் கலைமகளருள்பெற்று ஆசு, மதுரம், சித்திரம், விஸ் தாரமென்னுங் கவி மழைபொழியுங் காளமேகமாய் விளங்கினர். அசாதாரணமான இவரது கவித்திறமையைத் திருமலைராயனது அவையில் அதிமதுரகவி முதலிய பல புலவர் முன்னிலையில் தமது திறமைதோன்ற இவர் கூறிய பின்வருஞ் செய்யுளாலும் மற்றும் அவர்கள் வினாக்கட்கு இவர் விடுத்த விடைகளாகிய வேறு பல செய்யுட்களாலும் நன்கறியலாம். திருமலைராயன் காலத்தவராதலின் சுமார் ஐந்நூறாண்டுகட்கு முன்னிருந்தவர் என்ப. இவரைத் திருக் குடந்தை நகரிற் பிறந்தவர் என்பாருமுளர்.

தூதஞ்சு நாழிகையி லாறுநா ழிகைதனிற் சொற்சந்த மாலை சொல்லத்
 துகளிலா வந்தாதி யேழுநா ழிகைதனிற் றொகைபட விரித்து ரைக்கப்
பாதஞ்செய்மடல்கோவை பத்துநா ழிகைதனிற் பரணியொருநாண்முழுதுமே
 பாரகா வியமெலா மோரிரு தினத்திலே பகரக்கோ டிக்கட்டினேன்
சீதஞ்செ யுந்திங்கண் மரபினு னீடுபுகழ் செய்யதிரு மலைராயன் முன்
 சீறுமா றென்னுமிகு தாறுமா றுகள்செய் திருட்டுக் கவிப்புல வரைக்
காதங் கறுத்துச் சவுக்கிட் டடித்துக் கதப்பிற் புடைத்து வெற்றிக்
 கல்லணையி னுடுகொடிய கடிவாள மீட்டேறு கவிகாள மேகநானே.

பல்வகைச் சுவையும் ததும்ப இவர் பாடிய செய்யுட்கள் பல வற்றுள் வைஷ்ணவபரமான சிலவே இங்குக் குறிக்கப்படுகின்றன.

திருவரங்கச்செல்வரை மணியாகச் சிலேடித்துப் பாடியது.

(1) பாங்கு பெறுந்திரு வைந்நூற் றிரட்டிப் பணவிடையிற்
றூங்கு மதிலொரு மாவேற்ற முண்டு சுரர்முனிவர்
ஆங்கவர் செப்பிற் கடங்கா துலக மனைத்தும்பெறும்
ஓங்கு மரங்கத் திருப்பெட் டகத்து ளொருமணியே.

இ-ள். (மணியைக்குறிக்கும்போது) உயர்ந்த திருவரங்கமாகிய அழகிய பெட்டியிலிருக்கின்ற ஒப்பற்ற இரத்தினமானது, அழகு பெற்றிருக்கும்; ஆயிரம் பணவெடை யென்னும் நிறைபெற்றிருக்கும்; அதில் ஒருமா அதிகமுண்டு; தேவர் முனிவர் முதலியோரது செப்பினுள் அடங்காது; உலகங்களையெல்லாம் விலை மதிக்கப் பெறும்.

(திருவரங்கச்செல்வரைக்குறிக்கும்போது) உயர்ந்த திருவரங்கந்திருக்கோயிலிற் பொருந்திய நீலமணிபோன்ற திருவரங்கர் அழகு பொருந்திய (ஆதிசேடனது) ஆயிரம் பணமகுடங்களினிடையே பள்ளிகொள்வர்; அவர்பால் ஒப்பற்ற திருமகளும் ஏறி வீற்றிருத்தல் உண்டு; தேவர் முனிவர் முதலியோரது சொல்லுக்கடங்கார்; எல்லா உலகங்களையும் தம்மிலே தோற்றுவித்தருள்வர்.

இடை = எடை—நிறை; மரூஉ. பணவிடை—பணத்தின் எடை, பண மகுடங்களின்கீழ். தூங்கும்—மிகும், கண்வளர்ந்தருளும். மா—ஒருமாவென்னும் எடையளவு, திருமகள். ஏற்றம்—மிகை, ஏறி வீற்றிருத்தல். செப்பு—சிமிழ், துதிச்சொல். பெறுதல்—விலை கொள்ளுதல், தோற்றுவித்தல். என முறையே மணிக்கும் அரங்கர்க்கும் சிலேடைப்பொருள் கண்டுகொள்க.

ஈயேற மலைகுலுங்கப்பாடுக என அப்புலவர் பாடிய வெண்பா.

(2) வாரணங்க ளெட்டும் மகமேரு வுங்கடலும்
தாரணியு மெல்லாஞ் சலித்தனவால்—நாரணனைப்
பண்வா யிடைச்சி பருமத்தி னாலடித்த
புண்வாயி லீமொய்த்த போது.

இ-ள். (திருவாய்ப்பாடியிற் கண்ணனாயவதரித்த) திருமாலை இசை பொருந்திய வாயையுடைய யசோதைப்பிராட்டி பெரிய

மத்தினாலடித்த புண்ணின்கண் ஈக்கள்மொய்க்க அதனால் அருவருத் தசைந்தபோது திசையானைகளெட்டும் மகாமேருமலையும் எழுகடல் களும் உலகங்களும் ஆகிய வெல்லாப் பொருள்களும் குலுங்கின எ-று. மேற்கூறிய பொருள்களெல்லாம் எம்பெருமானது திருவு தரத்தில் வைத்துக் காக்கப்படுவனவாதலால் அவனது திருமேனி யசையவே அவையு மசைந்தன வென்பதாம்.

வாரணம்—யானை. தாரணி—பூமி.

ஒருவர், பன்றிக்கு மார்பிலே கோம்பு முளைத்ததெனப் பாடவேனப் பாடியது.

(3) தெருமுட்டப் பாளை சிதறவளர் பூகத்
தருமுட்டச் செவ்வாளை தாவும்—திருமுட்டத்
தூரிலே கண்டே னொருபுதுமை பன்றிக்கு
மாரிலே கொம்பான வாறு.

(இ-ள்.) தெருக்கள் முழுதும் பாளைகள் சிதறுமாறு வளர்ந்த கமுக மரங்கள்தோறும் செவ்வாளை மீன்கள் துள்ளிப்பாய்கின்ற திருமுட்டமென்னுந் திருப்பதியில் ஓரற்புதங்கண்டேன். (அஃ தென்னையெனின்) பன்றிக்கு மார்பிலே கொம்புண்டாயிருந்தபடி யாம் எ-ம்.

பூகம்—கமுகு. தரு—மரம். புதுமை—அற்புதம். பன்றி—ஸ்ரீ பூவராகமூர்த்தி. கொம்பு—கொடி. அவரது திருமார்பிலெழுந்தருளி யிருக்கின்ற பூங்கொம்புபோன்ற திருமகளார். மார்—மார்பு; மரூஉ.

ஒருவர், "போன்னுவரையிலைகாய்பூ" வேன்று பாடவேண்டுமேனப் பாடியது.

(4) உடுத்ததுவு மேய்த்ததுவு மும்பர்கோன் றன்னால்
எடுத்ததுவும் பள்ளிக் கியைய—படுத்ததுவும்
அந்நா ளெறிந்ததுவு மன்பி னிரந்ததுவும்
பொன்னு வரையிலைகாய் பூ.

தேவதேவனான திருமாலால் (ஆடையாக) உடுத்தது பொன். (பீதாம்பரம்) மேய்த்தது ஆ. (பசு) எடுத்ததுவரை. (கோவர்த்தன மலை) படுத்தது இலை. (ஆலிலை) எறிந்தது காய். (விளங்காய்) இரந் தது பூ (பூமி) என முறையே கொள்க.

வரை யெடுத்தது:— திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாருங் கூடி மழையின் பொருட்டாக இந்திரனை யாராதித்தற்கென்று வழக்கம்போற் சமைத்த சோற்றைக் கண்ணபிரான் அவனுக்கிடாதபடி விலக்கிக் கோவர்த்தனமலைக்கிடச்சொல்லித் தானே ஒரு திவ்ய உருக்கொண்டு அமுது செய்தருள, அதுகண்ட இந்திரன் கோபங் கொண்டு ஏழு மேகங்களையும் ஏவி ஏழுநாள் விடாது கல் மழை பெய்விக்க, அதனால் மிகவும் வருத்தமுற்ற கோக்களையும், கோபர்களையும் கண்ணபிரான் கோவர்த்தனமலையைக் குடையாகப்பிடித்துக் காத்தருளினன் என்பதாம்.

விளவெறிந்தது:— கம்சனாலேவப்பட்ட கபித்தாசுரனென்பான் கண்ணன் தன் கீழ்வரும்பொழுது வீழ்ந்துகொல்ல வெண்ணிவிளமரத்தின் வடிவமாய் வந்துநிற்க, அஃதறிந்த கண்ணன், அங்ஙனமே தன்னை முட்டிக்கொல்லுதற்கு வந்த வத்ஸாசுரனைப் பின்னங்காலிரண்டையும்பற்றிச் சுழற்றி அவ்விளாவின்மேல் எறிந்து அவ்விருவரையும் சங்கரித்தனன் என்பதாம்.

திருமாலிருஞ்சோலைமலை.

(5) மீனமுக மாமைமுக மேதினியெ லாமிடந்த
ஏனமுகஞ் சிங்கமுக மென்னுமல்—ஞானப்
பழகரென்றுஞ் சோலைமலைப் பண்பரென்று மும்மை
அழகரென்றும் பேரிட்டார் யார்.

இ-ள். மீனமுகமென்றும் ஆமைமுகமென்றும் உலகையெல்லாமிடந்த பன்றிமுகமென்றும் சிங்கமுகமென்றுங் கருதாமல் உம்மை ஞானிகளாற் பழகப்படுவாரென்றும் சோலைமலையிற் பொருந்திய குணக்கடலென்றும் அழகரென்றும் பெயரிட்டவர் எவரோ? எ-று. மீனமுகமும் ஆமைமுகமும் பன்றிமுகமுஞ் சிங்கமுகமுமாக உடம்பொடு முகங்களொவ்வாத தோற்றமுடைய உம்மை ஞானப்பழகரென்றும் பண்பரென்றும் அழகரென்றுங் கூறுவது என்ன ஆச்சரியம் என்பதாம்.

(6) சதுரரங்கர் சங்கத் தழகர்செங் கைச் சங்கை
அதரமிசை வைத்திலரே யாயின்—முதலை

வருங்குளத்தின் முண்டகங்கை வைப்பரன்றே யன்று
பொருங்களத்தி னூற்றுவர்முன் போய்.

இ-ள். மேன்மை பொருந்திய அரங்கர், சங்கத்தலைவராயிருந்த அழகர் அவர் தமது சிவந்த திருக்கையிலுள்ள பாஞ்சசன்யம் என்னுஞ் சங்கத்தைத் தமது திருவதரமிசை வைத்து முழக்கிலராயின் அந்நாளில் தலைமைபெற்ற ஐவரும் போர்க்களத்தில் நூற்றுவர்க்கெதிரே சென்று தமது தலையில் தாமரைமலர்போன்ற கையை வைத்துக்கொண்டழுவர்; எ-று

சங்கை அதரமிசை வைத்தல்—சங்கத்தை வாயில் வைத்தூதல். அதரம்—உதடு.

கண்ணபிரான் பாரதப்போரிற் பார்த்தசாரதியாகி ஐவர்க்கு வெற்றியும் நூற்றுவர்க்கு மனக்கலக்கமும் உண்டாகுமாறு தன்து பாஞ்சசன்யத்தை முழக்கியருளினன். அவ்வாறு செய்திலனாயின் பாண்டவர் தோல்வியுற்று வருந்துவர் என்பதாம்.

முதலைவர்—முதன்மைபெற்ற ஐவர். குளம்—நெற்றி. இங்குத் தலை. முண்டகம்—தாமரை.

"முதலை வருங்குளத்தின் முண்டகம்" என்ற தொடரின் சொல் நயம் கவனிக்கற்பாலது.

"அரங்கனை நாடிலயன், நகமுண்டகமலர்தான் குவியாது நடுக் குளத்தே" என்ற திவ்யகவியின் திருவாக்கு இங்கு நோக்கத் தக்கது.

திருக்கண்ணபுரம் சவுரிநாராயணப்பெருமாள்
திருநக்ஷத்திரத்தைக் குறித்துப் பாடிய வெண்பா.

(7) உத்திரத்துக் கோர்நா ளுரோகிணிக்குப் பத்தாநாள்
சித்திரைக்கு நேரே சிறந்தநாள்—எத்திசையும்
காராரும் பூஞ்சோலைக் கண்ணபுரம் வாழ்சவுரி
நாரா யணன்பிறந்த நாள்.

நாள்—நக்ஷத்திரம். உத்திரத்திற்கடுத்ததும், உரோகிணிக்குப் பத்தாவதும், சித்திரைக்கு முற்பட்டதுமாகிய நாள் அஸ்தம். சவுரி நாராயணன் அவதரித்த நாள் அஸ்தம் என்பதாம்.

ஒருவர், பச்சைவடப்பாகு சேலை சோமன் என்று
பாடவேண்டுமெனப் பாடியது.

(8) மாயன் றுயின்றதுவு மாமலராள் சொல்லதுவும்
ஏய குருந்திற்கொண் டேறியதும்—தாயை
இடப்பாகன் சென்னியின்மே லேறியதும் பச்சை
வடப்பாகு சேலைசோ மன்.

மாயன் துயின்றது பச்சை வடம். (பசிய ஆலிலை. வடம்—ஆல்) மாமலராள் சொல்—பாகு. (தேம்பாகு) குருந்திற்கொண்டேறியது சேலை. (புடைவை) தூயை இடப்பாகன்—பரிசுத்தையான உமையை இடப்பாகத்திலுடைய சிவன். அவன் சென்னியின்மே லேறியது சோமன். (சந்திரன்).

மாயன் பச்சை வடத்திற் றுயின்றது. பிரமன் முதலிய சகல தேவர்களுமுட்பட யாவுமழிந்துபோகின்ற யுகாந்தகாலத்தில் திருமால் அண்டங்களையெல்லா முண்டு தன் வயிற்றில் வைத்தடக்கிக் கொண்டு சிறு குழந்தை வடிவமாய் ஆதிசேஷனது அம்சமானதோர் ஆலிலையின்மீது பள்ளிகொண்டு யோகநித்திரை செய்தருளுகின்றனனென்பது புராண கதை.

மாயன் சேலைகொண்டு குருந்திலேறியது :—

திருவாய்ப்பாடியிலுள்ள கோபஸ்திரீகள் கண்ணபிரானிடங் கொண்ட வேட்கை மிகுதியால் அவன் தம்மிடம் காதல் மிகுமாறு, நோன்பு நோற்று அதன் முடிவில் யமுனைநதியிற் சென்று நீராடா நிற்க அப்பொழுது அவர்கள் கரையில் அவிழ்த்து வைத்திருந்த ஆடைகளை யெல்லாம் கண்ணன் வந்தெடுத்துக்கொண்டு அருகிலுள்ள குருந்தமர மொன்றிலேறியிருந்து அவர்களைச் சிறிது பொழுது அலைக்கழித்துப் பின்பு அவர்கள் கைகூப்பி வணங்கிப் பிரார்த்திக்க அவர்கட்கு அவற்றைக் கொடுத்தருளினன் என்பதாம்.

யசோதைப்பிராட்டி கண்ணனை மத்தினலடித்ததைப்பற்றி
இரங்கிக்கூறியதாகப் பாடுகவெனப் பாடியது.

(9) வண்ணங் கரியனென்றும் வாய்வேத நாரியென்றும்
கண்ணனிவ னென்றுங் கருதாமல்—மண்ணை

அடிப்பதுமத் தாலே யளந்தானை யாய்ச்சி
யடிப்பதுமத் தாலே யழ.

நிலத்தைத் தனது திருவடித்தாமரையாலளந்தருளினவனை இவன் நிறத்தினாற் கரியோனாகிய் திருமாலென்றும் திருவாயில் எல்லா வேதங்களும் பரிமளிக்கப்பெற்றவனென்றும் எவர்க்கும் கண்போன்று சிறந்தோனென்றும் எண்ணாமல் யசோதைப்பிராட்டியார் அவனை அழும்படி மத்தைக்கொண்டோ அடிப்பது? (இஃதென்ன பேதைமை.)

கண்ணன் எல்லார்க்குங்கண்ணாயிருப்பவன். எல்லார் கண்ணினு மிருப்பவனென்றுமாம்.

வீதியாய்ச் செய்கின் றான்போல் விழித்திமை யாது நின்ற
மாதரார் கண்க ளூடே வாவுமான் றேரிற் செல்வான்
யாதினு முயர்ந்தோர் தன்னை யாவர்க்குங் கண்ண னென்றே
யோதிய பெயர்க்குத் தானே யுறுபொரு ளுணர்த்தி யிட்டான்.

என்ற கம்பநாடர் திருவாக்கு இங்கு நோக்கத்தக்கது.

திருமோகூர்ப்பெருமானைப் பாடிய முறைநிரனிறை.

(10) பொன்னனைவா ளரக்கனைநூற் றுவரைக் காவைப்
பொருசிலையைக் கனைகடலைப் பொன்ன னீன்ற
நன்மகற்காய்ச் சுரர்க்காயை வருக்காய்க் காதல்
நப்பினைக்காய்ச் சானகிக்காய் நடவைக் காக
மன்னுகிரால் வடிக்கணையால் வளையாற் புள்ளால்
வயங்குதோள் வலியால்வா னரங்க ளாலும்
முன்னுடற்கீ றிச்சிரங்கொண் டமரில் வீழ்த்தி
முதலொடுங்கொண் டிறுத்தடைத்த மொகூ றானே.

இங்கு, பொன்னனை, வாளரக்கனை, நூற்றுவரை, காவை, பொருசிலையை, கனைகடலை என முறையே நிற்கும் ஆறு சொற்களையும் நன்மகற்காய் என்பது முதலிய ஆறோடும், மன்னுகிரால் என்பது முதலிய ஆறோடும் முன்னுடற்கீறி என்பது முதலிய ஆறோடும் முறையே கூட்டி, பொன்னனைப் பொன்னனீன்ற நன்மகற்காய் மன்னுகிரால் முன்னுடற்கீறி என்றும், வாளரக்கனைச் சுரர்க்காய் வடிக்கணையாற் சிரங்கொண்டு என்றும், நூற்றுவரை ஐவருக்காய்

வளையால் அமரில் வீழ்த்தி என்றும், காவைக் காதல் நப்பினைக்காய் முதலொடுங்கொண்டு என்றும், பொருசிலையைச் சானகிக்காய்த் தோள்வலியால் இறுத்து என்றும், கனைகடலை நடவைக்காக வானரங்களால் அடைத்த மோகூரான் என்றும் பொருள் கண்டுகொள்க.

பொன்னன்—இரணியன். வாளரக்கன்—வாட்படையுடைய அரக்கனாகிய இராவணன். நூற்றுவர்—துரியோதனாதியர். கா—சோலை. (பாரிஜாதச்சோலை) சிலை—வில். (சிவதனுசு) நன்மகன்—சற்புத்திரனாகிய பிரகலாதன். சுரர்—தேவர். ஐவர்—பஞ்சபாண்டவர். நடவை—வழி. (இலங்கைக்குச்செல்ல வழியுண்டாம்பொருட்டு) உகிர்—நகம். வடிக்கணை—கூரிய அம்பு. வளை—சங்கம். (சங்கத்தொனியால்) புள்—பறவை. (பக்ஷிராஜனான கருடன்) சிரங்கொண்டு—தலைகளையறுத்து. அமர்—போர். முதலொடுங்கொண்டு—வேரோடும் பெயர்த்துவந்து. இறுத்தல்—ஒடித்தல்.

ஒரு கலியாணத்தில் அத்தம்பதிகளைத் திருமாலும் சிவனும் காக்கவென்று ஆசீர்வதித்துப் பாடிய சிலேடை.

(11) சாரங்க பாணியாஞ் சக்கரத்தர் கஞ்சனைமுன்
ஓரங்கங் கொய்தவுகிர்வாளர்—பாரெங்கும்
ஏத்திடுமை யாக ரினிதா யிவரும்மைக்
காத்திடுவ ரெப்போதுங் காண்.

(திருமால்பரம்) சாரங்கபாணியர்—சாங்கமென்னும் வில்லைக் கையிலுடையவரும், அம்சக்கரத்தர்—அழகிய சக்கராயுதத்தையுடையவரும், முன்—முன் நாளில், கஞ்சனை—இரணியனை, ஓரங்கம் கொய்த— ஒப்பற்ற வுடம்பைக் கிழித்த, உகிர்வாளர்—நகமாகிய வாட்படையையுடையவரும், பாரெங்கும்—உலகமெல்லாம், ஏத்திடும்மையர்கர்— துதிக்கப்படுகின்ற கரிய திருமேனியையுடையவருமாகிய திருமால். கஞ்சன்—காஞ்சனனென்பதன் மரூஉ. காஞ்சனம்—பொன். பொன்னன்—இரணியன். கஞ்சன்-கம்சனென்று கொள்ளின் ஓரங்கங்கொய்த வுகிர்வாளரென்பதனோடு பொருந்தாமை காண்க.

(சிவபரம்) சாரங்கபாணியர் — மானைக் கையிலுடையவரும், அஞ்சு அக்கரத்தர்—பஞ்சாக்ஷரத்தையுடையவரும், கஞ்சனை முன் ஓர் அம்கம் கொய்த வுகிர்வாளர்—பிரமனை முன்னாளில் ஓர் அழகிய

சிரத்தைக்கிள்ளிய கூரிய நகமுடையவரும், பாரெங்கும் ஏத்திடு—உலகெல்லாந் துதிக்கின்ற, உமை ஆகர்—உமாதேவியை உடம்பின் ஒருபாலுடையவரும் ஆகிய சிவபிரான்.

இவரும்மை எப்போதும் இனிதாய்க் காத்திடுவர் என முடித்துக்கொள்க.

அவ்வாறு சிலேடையாகப் பாடிய சந்திரோபாலம்பனம்.

(12) இருந்தாரை கேள்வனை யோங்கு மராவை யெழுபுனலைத்
திருந்தாரை வன்னியை முன்முடித் தோன்செய்ய வேளைப்பண்டு
தருந்தாதை நாயகன் சுந்தரன் றூதன் சமரிலன்று
பொருந்தார் புரத்திட்ட தீப்போல் மதியம் புறப்பட்டதே.

(திருமால்பரமான பொருளில்) தாரைகேள்வன்—வாலி. மரா—மராமரங்கள். எழுபுனல்—அலையெழுகின்ற கடல். திருந்தார்—பகைவராகிய அசுரர். வன்னி—ஓரவுணன். முடித்தல்—சங்கரித்தல். வேள்—மன்மதன். நாயகன்—உலகனைத்திற்கும் தலைவன். சுந்தரன்—அழகனாகிய ஸ்ரீராமன். தூதன்—அனுமான். சமர்—போர். பொருந்தார்—பகைவர். புரம்—இலங்கை. அனுமான் இலங்கையிலிட்ட தீயைப்போன்று மதியம் புறப்பட்டதென்க.

(சிவபரமான பொருள்) தாரைகேள்வன்—சந்திரன். அரா—பாம்பு. புனல்—கங்கை. திருந்து ஆர்—திருந்திய ஆத்தி. வன்னி—வன்னியிலை. முடித்தல்—சிரசிற் சூடுதல். வேள்—முருகன். சுந்தரன் தூதன்—சுந்தரர்க்குத் தூதன். புரம்—திரிபுரம். திரிபுரத்திலிட்ட தீயைப்போன்று மதியம் புறப்பட்டதென்றவாறு.

சந்திர உபாலம்பனம்—சந்திரனைப் பழித்தல். "தேய்பவிளம் பிறையுமென்றனக்கோர் செந்தழலே" என்றவாறு, விரகதாபமுடையாரைச் சந்திரனது தண்கதிரும் தழல்போற் சுடுமாதலின் அவர் இங்ஙனம் அதனைப் பழித்தல் இயல்பு.

ஒருவர், முகுந்தனுக்கும் முறத்துக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

(13) வல்லரியா யுற்றிடலால் மாதர்கையிற் பற்றிடலால்
சொல்லரிய மாப்புடைக்கத் தோன்றுதலால்—வல்லோர்

அகந்தனிலே வாழ்தலா லன்றுலக ளந்த
முகுந்தனுமே யாகு முறம்.

(முகுந்தன்.)

வல்அரியாய் உற்றிடலால்—வலிய நரசிங்கமாய்த் தோன்றுதலால். மாதர் கையில் பற்றுதலால்—ஆய்ச்சியர் கையாற் பற்றப்படுதலால். சொல்லரிய—(வலி. இவ்வளவென்று) சொல்லுதற்கரிய. மா புடைக்கத் தோன்றுதலால்—இடங்கர்மாவை யழிக்கத் தோன்றியருளுதலால். வல்லோர்—தன்னைத் தியானிக்க வல்லோரது. அகந்தனிலே வாழ்தலால்—இருதயகமலத்தில் நீங்காது வாழ்தலால். (மாதர் கையிற் பற்றியது உரலிற் பிணித்தல் குரவைக் கூத்தாடுதல் முதலியவற்றிற்கு.) இடங்கர்மா—கஜேந்திரனைப்பற்றிய முதலை, (இடங்கர்—முதலை. மா—மிருகம். முதலையாகிய மிருகம்) மா குவலயாபீடமெனினும் பொருந்தும்.

(முறம்.)

அரி ஆயுற்றிடல்—அரிசியைக் கல் முதலியன இல்லாமல் ஆய்தல். மாதர் கையிற் பற்றுதல்—பெண்டிர் கையிலேந்தப்படுதல். மாபுடைத்தல்—மா முதலியவற்றைத் தெள்ளியெடுத்தல். வல்லோர் அகம்—இல்வாழ்க்கையில் வல்லோரது வீடுகள். (அவ்வீடுகளிலிருத்தலால்).

ஒருவர், வானவில்லுக்கும் விஷ்ணுவுக்கும் வெற்றிலைக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

(14) நீரி லுளதா னிறம்பச்சை யாற்றிருவாற்
பாரிற் பகை தீர்க்கும் பான்மையாற்—சாருமனுப்
பல்வினையை மாற்றுதலாற் பாரீர் பெருவான
வில்விண்டு நேர் வெற்றிலை.

வானவில்.

நீரிலுளதால்—நீர் கொண்ட மேகத்திற் றோன்றுதலால். நிறம் பச்சையால்—பச்சை நிறமுடைமையால். திருவால்—அழகால். பாரில் பகை தீர்க்கும் பான்மையால்—உலகத்திற் கோடையாகிய பகையைப்போக்குந்தன்மையால். சாரும்மனு பல்வினையை மாற்றுதலால்-பொருந்திய மனிதரது பல துன்பங்களையும் போக்குதலால்.

திருமால்.

நீரில் உளதால்—பிரயள வெள்ளத்திலும் அழியாதிருத்தலால். நிறம் பச்சையால்—பச்சைநிறமுடைமையால். திருவால்—திருமகளை யுடைமையால். பாரில் பகை தீர்க்கும் பான்மையால்—உலகத்தில் (தேவர் முனிவர்கட்கு) பகைவராகிய அசுரரை யழித்தலால். சாரும் மனு—தன்னைச் சரணமடைந்த மனிதரது. பல்வினையை மாற்றுதலால்—பல பாவங்களையு மொழித்தலால்.

வெற்றிலை.

நீரில் உளதால்—நீர்க்கால்களிருப்பதால். நிறம் பச்சையால்—பசிய நிறமுடைமையால். திருவால்—லக்ஷ்மீகரத்தால். பாரில் பகை தீர்க்கும் பான்மையால்—உலகத்தில் ஒருவரோடொருவர்க்குள்ள பகைமையைப் போக்குந்தன்மையால். சாரும்மனு—உலகிற்பொருந்திய மனிதரது. பல்வினையை மாற்றுதலால் — தந்த ரோகத்தை நீக்குதலால்.

காஞ்சீபுரம் வரதராஜரது யானை வாகன உற்சவத்தைச் சிறப்பித்துப் பாடியது.

(15) எட்டொருமா வெண்காணி மீதே யிருந்தகலை
பட்டொருமா நான்மாவிற் பாய்ந்ததே—சிட்டர்தொழும்
தேவாதி தேவன் திருவத்தி யூர்வாதன்
மாவேறி வீதிவரக் கண்டு.

சிட்டர்—மேலோர். அத்தியூர் வரதன்—அத்திகிரியை ஊராக வுடைய வரதன். மா—யானை. எட்டு ஒருமா எண்காணி—அரை. (எட்டு ஒருமாவும் எண்காணியும்) கலை—வஸ்திரம். பட்டு—அவிழ்ந்து. ஒருமா நான்மா—கால். (ஒருமாவும் நான்குமாவும்) பாய்ந்தது—வீழ்ந்தது. பவனிகண்ட மாதர்க்குக் காதல் மிகுதியால் அரையிலிருந்த ஆடை அவிழ்ந்து காலில் விழுந்ததென்க. இது பவனிகண்டழுங்கல் என்னுந்துறை. பின்வருவதுமது.

(16) ஒரொருமா வொன்றுமா வொன்பதுமா வின்கலையை
ஈரொருமா மும்மாவுக் கீந்ததே—பாரறியப்
பொன்மானின் பின்போன பூமங்கை யாள்வாரைக்
கன்மாவின் வீதிவரக் கண்டு.

இவர் வறும்புனங்கண்டு தலைவனிரங்கலாகப் பாடியது.

(17) கம்பத்தா னைக்கடையிற் கட்டினன் கால்சாய
அம்பைத்தா வித்தான்கா லானதே—வம்புசெறி
பூவைகாள் கிள்ளைகாள் பூங்குயில்கா ளன்றில்காள்
பாவையா ளர்ண்ட பதி.

வறும்புனங்கண்டிரங்கலாவது:— தலைவியின்றியும் தினையரியப்பட்டும் வறிதாயிருந்த புனத்தைக்கண்டு தலைவன் இரங்கிக் கூறுவது. தினைப்புனங்காத்திருந்த தலைவியை ஆண்டுச்சென்று கூடி வந்த தலைவன் ஒருநாள் ஆங்குச்சென்றபொழுது அது தினையரியப் பட்டும் தலைவியின்றியும் (இற்செறிக்கப்பட்டும்) வறிதாயிருந்தமை கண்டு ஆண்டிருந்த பூவை கிளி முதலியவற்றை நோக்கி இரங்கிக் கூறினனென்க.

பொருள். கம்பத்தான்—தலை பத்துடைய இராவணன். (கம்—தலை.) கடை—வால். கட்டினன்—வாலி. கால்சாய—வேரோடு சாய. அம்பைத்தாவித்தான்—அம்பை யழுத்தினவனை ஸ்ரீராமன். (அரி) காலானது—தாளாயிற்று. (அரிதாளாயிற்று) பாவையாளிருந்த தினைப்பும் அரிதாளாயிற்று என்றவாறு. அரிதாள்—அரியப்பட்ட தாள். தாவித்தான்—தாவுவித்தான்.—செலுத்தினவனென்றுமாம்.

அதிமதுரகவி திருமாலவதாரம் பத்தினையும் ஒரு வெண்பாவிலடக்கிப் பாடகவென இப்புலவர் இதற்கு ஒரு வெண்பாவும் வேண்டுமோ நான் பாதி வெண்பாவிற் பாடுவேனென்று பாடியது.

(18) மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்
இச்சையிலுன் சென்ம மெடுக்கவா—மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோபா லாமாவா வாய்.

சென்மம்—அவதாரம். மச்சம்—மீன். கூர்மம்—ஆமை. கோலம்—வராஹம். (பன்றி) சிங்கம்—நரசிங்கம். வாமன்—வாமனன். ராமன் முன்னது பரசுராமன் இடையது ஸ்ரீராமன் பின்னது பலராமன். கோபாலன்—கண்ணன். மா—குதிரை. (கற்கி) இனியெடுக்க விருப்பதாகலின் ஆவாய் என எதிர்காலத்தாற் கூறினர். மச்சம்,

கூர்மம் முதலிய சொற்கள் மச்சன் கூர்மன் என உயர்திணை விகுதிபெற்றுப் பின் விளியுருபேற்று நின்றன. பிறவுமன்ன.

ஒருவர், மும்மூர்த்திகளின் பெயர், அவர்கள் தின்னுங்கறி, உண்ணு முணவு, ஏந்தும் படை, பூணும் அணி, ஏறும் ஊர்தி, வசிக்கும் இடம் இவைகளை ஒரு வெண்பாவிலடக்கிப் பாடவேண்டுமெனப் பாடியது.

(19) சிறுவ னளைபயறு செந்நெற் கடுகு
மறிகிகிரி தண்டு மணிநூல்—பொறியரவம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றூழும் பூவே கறி.

(பொ-ள்.) வேதன் அரன் மாலுக்கு—முறையே பிரமன், சிவன், திருமால் என்னுமிவர்க்கு. கறி பயறு சிறுவன் அளை—கறிகளாவன:— பயறும், பிள்ளையும், வெண்ணெயுமாம். செந்நெல் கடுகு—(உணவு) செந்நெல்லும் விடமும் பூமியுமாம். தண்டு மறிகிகிரி—(படை) தண்டமும், மான்மறியும் சக்கரமுமாம். நூல் பொறியரவம் மணி—(அணி) பூணூலும், புள்ளிகளையுடைய பாம்பும், கௌத்துவ மணியுமாம். அன்னம் வெற்றேறு புள்—(ஊர்தி) அன்னமும் வெளிய இடபமும் கருடப்புள்ளுமாம். பூ கல் தாழ் அம்—(இடம்) தாமரைப்பூவும் (கைலை) மலையும் ஆழமான பாற்கடலுமாம். சிறுவன்—சிறுத்தொண்டனார் மகனாகிய சீராளன். அளை—வெண்ணெய். கடு—விடம். கு—பூமி. கல்—மலை. அம்—நீர். (பாற்கடல்.)

கடை மொழி மாற்றாகப்பாடிய செய்யுட்கள்.

(கடை மொழி மாற்றாவது செய்யுளின் கடையிலுள்ள சொல்லை முதலிலே கூட்டிப் பொருள்கொள்வது.).

(20) கொன்றை மலர்தரித்தான் கோபாலன் கோலெடுத்து
நின்றுகுழ லூதினா னீள்சடையோன்—பொன்றிகழும்
அக்கணிந்தான் மாய னரவணையிற் கண்வளர்ந்தான்
சிக்கலிலே வாழுஞ் சிவன்.

இதில் சிக்கலிலே வாழுஞ் சிவன் கொன்றைமலர் தரித்தான், கோபாலன் கோலெடுத்து நின்று குழலூதினான், நீள்சடையோன்

பொன்திகழும் அக்கணிந்தான், மாயன் அரவணையிற் கண்வளர்ந் தான் எனப்பொருள் கண்டுகொள்க.

அக்கு—என்பு. சிக்கல்—ஓர் சிவஸ்தலம். அரவணை—சேஷசயனம்.

(21) ஆயனுக்குக் கண்மூன்று மாதிசிவ னுக்கிருகண்
மாயனுக்குச் செய்கையிலே மான்மழுவாம்—நேயமுடன்
சங்கரற்குச் சங்காழி தான்மாலுக் காலமாம்
மங்கையிடத் தாற்காகு மண்.

இங்கு, மண்ணுகும் ஆயனுக்கு, கண் மூன்றும் ஆதிசிவனுக்கு, இருகண் மாயனுக்கு, செல்கையிலே மான்மழுவாம் நேயமுடன் சங்கரற்கு, சங்காழி தான் மாலுக்கு, ஆலமாம்மங்கையிடத்தாற்கு எனப்பொருள் கண்டுகொள்க.

ஆயன்—கண்ணன். மாயன்—திருமால். ஆழி—சக்கரம். ஆலம்—விடம். மங்கையிடத்தான்—உமையை இடது பாகத்தி லுடைய சிவபிரான்.

(22) இந்திரையை மார்பில்வைத்தா னீச னிடத்துமையை
அந்தி பகலமைத்தா னம்புயத்தோன்—கந்தமிகு
வெண்டா மரைமயிலை வேண்டிவைத்தா னாவிலுல
குண்டுமிழ்ந்த தாமரைக்கண் ணேன்.

இங்கு, உலகுண்டுமிழ்ந்த தாமரைக்கண்ணேன் இந்திரையை மார்பில் வைத்தான், ஈசன் உமையை இடது அந்திபகலமைத்தான், அம்புயத்தோன் கந்தமிகு வெண்டாமரைமயிலை வேண்டிவைத்தான் நாவில் எனப் பொருள் காண்க.

இந்திரை—இலக்குமி. அம்புயத்தோன்—பிரமன். கந்தம்—மணம். வெண்டாமரைமயில்—சரசுவதி.

(23) அன்னந் திருமாலுக் காங்கருடன் சங்கரற்காம்
பன்னிடப மிந்திரற்காம் பார்க்குங்காற்—றுன்னு
மதவா ரணமளகை மன்னனுக்காம் பஞ்ச
கதிசேர் புரவி விதிக் காம்.

இங்கு, விதிக்காம் அன்னம், திருமாலுக்காங்கருடன், சங்கரற் காம் பன்னிடபம், இந்திரற்காம் பார்க்குங்காற்றுன்னுமத வாரணம், அளகை மன்னனுக்காம் பஞ்சகதிசேர் புரவி.

மதவாரணம்—மதம் பொருந்திய ஐராவத யானை. அளகை மன்னன்—அளகைநகர்க் கதிபனுன குபேரன். புரவி—குதிரை.

விதி—பிரமன். பஞ்சகதி—குதிரையின் ஐங்கதிகள், அவை:—மல்லகதி, மயூரகதி, வானரகதி, வல்லியகதி, சரகதி என்பன. மயூரம்—மயில். வானரம்—குரங்கு. வல்லியம்—புலி. சரம்—அம்பு.

இனி, சுவரிதகம், ஆக்கிரந்திகம், வல்கிதம், இரேசிதம், புலிதம் என்பனவற்றை ஐங்கதி என்பாருமுளர். இவற்றிற்கு முறையே மெல்லியநடை, விரைந்தநடை, இருகாற்றூக்கியபடி வருநடை, சுற்றியோடல், முழுவோட்டம் என்பன பொருள்.

ரெ. இராமையங்கார்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல்,
மதுரை.

ஸ்ரீ:

ஸ்ரீவானமாமலை, ஸ்ரீராமாநுஜஸித்தாந்த ஸம்ப்ரதாயாபிவர்த்தநீ ஸபா.

இந்த ஸபை, பல்லாண்டுகளாக மிகவும் சிறப்புடன் நடைபெற்று வருகின்றதை யாவருமறிவர். இவ்வாண்டில் (சுக்ல வருஷத்தில்) இச்சபை, வனப்பருத்தி ஸம்ஸ்தானத்தைச் சார்ந்த ஸ்ரீரங்கபுரம் என்ற திவ்யதேசத்தில் நாளது புரட்டாசிமீ 12உ முதல் ஆரம்பிக்கப்பெற்று மிகவும் விமரிசையாக நடந்தேறியது.

அக்காலத்தில் சாஸ்திரத்தில் வல்லுநரான மஹா வித்வான்களின் வாக்யார்த்தமும், உபந்யாஸங்களும் நடைபெற்றன. முடிவில் ஆங்கு வந்திருந்த வித்வான்களனைவருக்கும் அவரவர்க்கேற்றவாறு ஸன்மானம் வழங்கலாயிற்று. ஸபையும் இனிது நிறைவேறியது.

இங்ஙனம்,
சடகோபாசாரியர்,
சிரோமணி
வானமாமலை மடம்.

ஸ்ரீ:

நவராத்திரி மஹோத்ஸவம்.

மதுரை ஸ்ரீ கூடலழகர் ஸந்நிதி மதுரவல்லித்தாயார் கொலு உத்ஸவம் நாளது சுக்கில-ஹு புரட்டாசி மாதத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மதுரையின் பக்கத்திலுள்ள தனிச்சயம் என்ற ஊரிலிருக்கின்ற ஸ்ரீமாந் கோவிந்தராமாநுஜ தாஸரவர்கள் இவ்வுத்ஸவத்திற்கும், விஜயதசமி உத்ஸவத்திற்கும் தம் சொந்த ஜேவேஜி விருந்து பண்டெழுதிவைத்து மிகவும் சிரத்தையுடன் இவ்வுத்ஸவங்களை நடத்தி வருகிறார். இவர் போன்ற இன்னும் சில தார்மிகர்கள் வேறு சில உத்ஸவங்களையும் இங்ஙனமே நடத்திவருவதற்கு உத்ஸாகத்தை விளைக்கவேண்டுமென்ற நன்னோக்கத்தோடு தேவஸ்தானம் கமிட்டி பிரஸிடெண்ட் மகா-ா-ா-ஸ்ரீ திருமகிழ்மாறன் பிள்ளையவர்களும், ஸ்ரீ கூடலழகர் தேவஸ்தானம் ஆநரெரி டிரஸ்டி மகா-ா-ா-ஸ்ரீ S. வெங்கடசாமி நாயுடுகாரும், ஆநரெரி ஸூப்பிரண்டெண்ட் மகா-ா-ா-ஸ்ரீ இராமசாமி செட்டியாரவர்களும் இவ்வுத்ஸவநாட்களில் ஒவ்வொரு தினமும் தவறாது வந்திருந்து உத்ஸவத்தைச் செவ்வனே நடத்தி வைத்தார்கள். இவர்களது முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது. மேலும் இவ்வுத்ஸவத்திற்கு அங்கமாகப் புல்லாங்குழல் முதலிய சங்கீதக் கச்சேரிகளும் நடைபெற்றன. கோயிலதிகாரிகள் இவ்வுத்ஸவத்தைச் செவ்வையுற நடத்திவைத்ததுபோல இனி வரப்போகிற மார்கழித் திருவத்யயனோத்ஸவத்தையும் நடத்திவைக்குமாறு வேண்டுகிறோம்.

ப. அ.

ஸ்ரீ:

சென்னை, ஸ்ரீ வைஷ்ணவ கான்பிரன்ஸ்.

இந்தக் கான்பிரன்ஸ் சென்னையில் ஸ்ரீமாந் K. வெங்கடசாமி நாயுடுகாரு (B. A; B. L.) முதலிய பிரமுகர்களின் நன்முயற்சியால் சிலவாண்டுகளாக நடைபெற்றுவருவதை யாவருமறிவர். 1929ம் வருஷம் டிசம்பர்மீ 30உ முதல் மூன்று நாள் வரை ஷை கான்பிரன்ஸ் சென்னையில் நடைபெறும். அக்காலத்து உபந்யஸிக்கத்தக்க பாகவதோத்தமர்களும், விஷயங்களைக்கேட்க விருப்பமுள்ள அபிமானிகளும் ஆங்கு விஜயஞ்செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (உபந்யஸிக்கின்றவர் மாத்திரம் தாம் உபந்யஸிக்கும் விஷயமின்னதென்பதை முன்னரே காரியதரிசிக்குத் தெரிவித்துக்கொள்வாராக.)

விலாசம்:—

ஸ்ரீமாந் K. வெங்கடசாமி நாயுடுகாரு (B. A; B. L.)
காரியதரிசி,
ஸ்ரீவைஷ்ணவ கான்பிரன்ஸ்,
அப்பா & கம்பெனி,
சௌகார்பேட்டை,
சென்னை.